செ.வெ.எண். 18 நாள் - 06.08.2020

**நீலகிரி மாவட்டம், குந்தா வட்டத்தில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும், பொதுமக்கள் தங்கியுள்ள நிவாரண முகாம்களையும் முதன்மைச் செயலாளர் / தலைமைச் செயல் அலுவலர், இன்கோசர்வ் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியா சாஹு இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

**ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.**

---

நீலகிரி மாவட்டம், குந்தா வட்டத்திற்குட்பட்ட குந்தா பாலம், கண்ணேரி மந்தனை மற்றும் எமரால்டு ஆகிய நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், முதன்மைச் செயலாளர் / தலைமைச் செயல் அலுவலர், இன்கோசர்வ் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியா சாஹு இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.08.2020) நேரில் பார்வையிட்டு அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்து, அங்குள்ள பொதுமக்களுக்கு பல்வேறு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருவதால் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மரங்கள் சாய்ந்துள்ளது. இதனை போர்கால அடிப்படையில் அகற்றிடும் வகையில் தொடர்ந்து சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (06.08.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் முதன்மைச் செயலாளர் / தலைமைச் செயல் அலுவலர், இன்கோசர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியா சாஹு இ.ஆ.ப., அவர்கள் குந்தா வட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அதனைத் தொடர்ந்து முதன்மைச் செயலாளர் / தலைமைச் செயல் அலுவலர், இன்கோசர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியா சாஹு இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது,

“இந்திய வானிலை ஆய்வு மையம் நீலகிரி மாவட்டத்தில் கனமழை பெய்யும் என தெரிவித்துள்ளது. குறிப்பாக எதிர்வரும் 8ம் தேதி அன்று கனமழை பெய்யும் என தெரிவித்துள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பாக ஏற்கனவே அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டள்ளது. இன்று குந்தா வட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கனமழை மற்றும் காற்றின் காரணமாக மரங்கள் சாய்ந்துள்ளது. இதனை அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நிவாரண முகாம்களில் 900 நபர்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிவாரண முகாம்களில் பொது மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளது.

குறிப்பாக கொரோனா தொற்று காலம் உள்ளதால், முககவசங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிவாரண முகாம்களில் தங்கியுள்ள குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு உணவு உட்பட அத்தியாவசிய பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டள்ளது. காற்றின் காரணமாக நமது மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மரங்கள் விழுந்துள்ளது. மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் ஆகியோர் இணைந்து சாலையில் உள்ள மரங்களை அகற்றி வருகின்றனர். **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, நமது மாவட்டத்திலுள்ள நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.** குறிப்பாக மழைநீர் செல்ல கூடிய மிகவும் தாழ்வான பகுதி கண்டறியப்பட்டு அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 25 முகாம்கள் அப்பகுதிகளில் தயார் நிலையில் உள்ளது. முக்கியமாக உயிர்சேதம் ஏற்படாத வகையில் மாவட்ட நிர்வாகம் மூலம் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காற்றின் வேகம் அதிகமாக உள்ளதால் பொதுமக்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும். தேவையில்லாமல் வெளியில் வருவதை தவிர்த்து, பாதுகாப்பாக இருக்க வேண்டும்." எனத் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது,

"நமது மாவட்டத்தில் கனமழை பெய்து வருவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கை துரிதமாக எடுக்கப்பட்டுள்ளது. **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கனமழை மற்றும் காற்றின் மூலம் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து தொலைபேசி மூலம் கேட்டறிந்து, அப்பகுதிகளை உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும் என அறிவுறுத்தியதை தொடர்ந்து, இன்று மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களுடன் இப்பகுதியில் ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.** தற்போது குந்தா பகுதிகளில் கனமழை மற்றும் காற்றின் வேகத்தால் சாலையில் விழுந்துள்ள மரங்களை அகற்றும் பணியில் மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினருடன் தீயணைப்புக்குழுவினரும் இணைந்து அகற்றி வருகின்றனர். மீட்புக்குழுவினர் பொதுமக்களை பாதுகாப்பான நிவாரண முகாம்களுக்கு அழைத்துச் செல்லும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்ட நிர்வாகம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுத்துள்ளதால், பொதுமக்கள் பீதி அடைய வேண்டாம். பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளை தவிர, வெளியே வருவதை தவிர்க்க வேண்டும். அவலாஞ்சி பகுதியில் கடந்த வருடம் பெய்துள்ள மழை அளவை விட இந்த ஆண்டு இப்பகுதியில் மழை அளவு குறைவாக பதிவாகியுள்ளது. இருந்தபோதிலும் சிறப்புக்குழு அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

த.பி.ப.,

அதிவேக காற்றின் காரணமாக பல்வேறு இடங்களில் மின்சார கம்பங்கள் சேதமடைந்துள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் முதன்மைப் பொறியாளர் தலைமையில் 4 சிறப்பு குழு அமைக்கப்பட்டு நிவர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உதகை துணை மின்நிலையம் மற்றும் கூடலூர் துணை மின்நிலையத்தில் மரங்கள் சாய்ந்துள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின்சாரம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. போர்கால அடிப்படையில் ூமரங்களை அகற்றி மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் மின்சாரம் கிடைக்க வழிவகை செய்யப்படும். பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்." எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் வி.சசிமோகன் இ.கா.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமாலினி, நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் திரு.விஸ்வநாதன், உதகை வருவாய் கோட்டாட்சியர் மரு.சுரேஷ், உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவர் திரு.மாயன் (எ) மாதன், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சந்திரசேகரன் மற்றும் திரு.ரமேஷ் கிருஷ்ணன், குந்தா வட்டாட்சியர் திருமதி.மகேஸ்வரி, கீழ்குந்தா பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ரவி, பிக்கட்டி செயல் அலுவலர் திரு.மோசஸ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்